1973 மார்ச் 21]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதிலே 'ஏ' விங் சம்பந்தமாக விகிதாசாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த விகிதாசாரப்படி உடனடியாக நியமனம் செய்வதற்கு இலாகாவில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1970-ல் 38 இடங்கள் மூன்று பயிற்சிக் கல்லூரிகள் உட்பட. 1971-ல் 25 இடங்கள். இதிலே ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட பள்ளிகள் என்று வகுத்து அந்த வகையில் 15 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப்படித் தேர்ந்தெடுத்து அந்தத் தலைமை ஆசிரியர்கள் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக ஆக்கப்படுகின்றார்கள். இதிலே குறைபாடு இருக்கிறது என்றோ, விடப்பட்டிருக்கிறது என்றோ கருதுவார்களானால் அது பற்றி விண்ணப்பித்துக் கொள்வார்களானால் முறைப்படி பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அவ்வளவு பேரையும் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்போது இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : அரசிதழ் பதிவுபெற்ற ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு என்ன தகுதிகளை வைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் பணிபுரிகிறவர்களை அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கின்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் 76 தலைமையாசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் உள்ளவர்கள் அந்தத் தகுதியுள்ளவர்கள் என்று கூறினார்கள். அது ஆசிரியர்களுடைய தகுதியைக் குறிப்பதாக இல்லை. ஆசிரியரின் தகுதியை அரசு எப்படி மதிப்பிடுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைமையாசிரியர்களில் பணி மூப்புடையவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுகின்றார்கள்.

New School for Thuraiyur

* 449 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a new school at Thuraiyur village in Thuraiyur taluk of Tiruchirappalli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. காமாட்சி : துறையூர் வட்டத்தில் துறையூர் டவுன், முனிசிபாலிடி என்றுதான் இருக்கிறதேதவிர, துறையூர் கிராமம் என்று இல்லை. துறையூர் கிராமம் என்று ஒன்று இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துறையூர் கிராமம் இருப்பதாகத் தெரியவில்லை. நகராட்சி இருக்கிறது. அங்கிருந்துதான் இந்தச் செயற்குறிப்பு வரவில்லை என்று குறிப்பிட்டேன்.

வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை

* 450 **வினா**—திரு. கே. எ. வகாப் . மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசியில் உள்ள பழைய கோட்டை, மசூதிகள் இவைகளைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள்பற்றிச் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. கே. எ. வகாப் : வந்தவாசியிலுள்ள பழைய கோட்டை, மசூதிகள் எல்லாம் தொல்பொருள் இலாகாவின் சார்பாக இருப்பதாகப் போர்டு போட்டிருந்தார்கள். அந்த போர்டைக்கூட இப்போது காணோம். அதிலுள்ள கற்களை எல்லாம் எடுத்து மக்கள் வீடு கட்டுகிறார்கள். அதோடு வட ஆர்க்காடு மாவட்டத்திலே நிறைய பழைய நவாப் பள்ளி வாசல்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க தொல்பொருள் இலாகாமூலம் முயற்சிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புராதனச் சின்னங்கள் என்ற வகையில் புராதனத்துவமும், முக்கியத்துவம் வாய்ந்தவை, வரலாற்று அடிப்படையில் இருப்பவற்றை மத்திய அரசும், மாநில அரசும் தேவைக்கேற்றவாறு பாதுகாப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வந்தவாசி கோட்டையில் அப்படி புராதனத்துவம், முக்கியத்துவம் அவ்வளவு உடையதாக இல்லை. இந்தப் பகுதி மிகுதியான நிலப்பரப்பு உடையது. அங்கு பலர் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அவை முழுவதையும் பாதுகாப்பது என்றால் ஏராளமான பொருட் செலவு ஆகும். சில கோடிட்ட பகுதிகளைமட்டும் எடுத்துப் பாதுகாக்கலாமா என்பதைப்பற்றித் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பரிசீலித்து வருகிறார்கள். அப்படிக் குறிப்பிட்ட பகுதியைப் பாதுகாக்க இயலுமா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருகிறது.